[20th September 1958

Veterinary Dispensaries in Coimbatore district.

* 384 *Q*.—Sri P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லாவிலே ஒவ்வொரு தாலுகாவிலும் எத்தனை கால்நடை ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன ?

(ஆ) ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் 1957-ம் வருஷத்திலே எத்தனை பிராணிகளுக்கு வைத்திய சிகிச்சை கொடுக்கப்பட்டது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

Sri P. G. MANICKAM : மேற்கண்ட கால்நடை ஆஸ்பத்திரிகளில் பிராணிகளுக்கு வைத்திய சிகிச்சை இலவசமாகக் கொடுக்கப்படுகிறதா? அல்லது கட்டணம் வாங்கப்படுகிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதற்குத் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சொல்லுகிறேன்.

Basic Education College

* 385 *Q*.—Sri A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சேவாக்கிராம முறையில் ஆதாரக் கல்வி கல்லூரி ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(ஆ) அப்படியானல் எங்கே, எப்போது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) The question does not arise.

Sri A. VEDARATHNAM : இப்போது ஆதாரக் கல்வியிலே உயர்நிலைக் கல்வி படிக்கக்கூடியவர்கள், அதே ஆதாரக் கல்வி முறையிலே கல்லூரிப் படிப்புப் படிக்க விரும்பினல் நம் மாகாணத்தில் இப்போது வசதியில்லையே, அதை எப்போது ஏற்படுத்திக் கொடுக்கப்போகிருர்கள், எங்கே ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்போது ஆதாரக் கல்வியில் உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கக் கூடியவர்கள் வெகு சிலர்தான். மூன்று, நான்கு பள்ளிகள்தான் இருக்கின்றன. அதற்காக ஒரு கல்லூரி ஏற்படுத்துவது தேவையல்ல.

Mr. SPEAKER : இப்பொழுது 10 மணி ஆகிவிட்டது. இன்னும் 10 நிமிடங்கள் உட்கார்ந்து பாக்கியிருக்கும் கேள்விகளை முடித்துவிடலாம். அதிலே ஒரு கேள்வி முக்கியமாயிருக்கிறது. ஆகையால் அதற்கு 5 நிமிஷம் கொடுப்பதாக உத்தேசித்திருக்கிறேன்.

Food poisoning

* 386 *Q*.—Sri T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the steps the Government have taken as precautionary measures to prevent the consumption of poisonous food articles unloaded from s.s. "Jai Hind";

(*b*) the number of deaths caused by food poisoning in the months of April and May;

[a] Printed as Appendix IV on pages 403–404 infra.